முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
இராணிப்பேட்டை.

**முன்னிலை : திரு.M. செல்வம், M.L.,**
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.

2024 ம் வருடம் ஜுலை திங்கள் 6 ஆம் நாள் சனிக்கிழமை

அ.வ.எண்.9/2022 ல் வழக்கிடை மனு எண்.2/2022

M. ஏழுமலை ......மனுதாரர்/பிரதிவாதி.

/எதிர்/

M. பாலாஜி .......எதிர்மனுதாரர்/வாதி.

இம்மனுவானது என் முன்பாக இறுதிவிசாரணைக்கு 27.06.2024 அன்று கொண்டுவரப்பட்டு, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.குத்புதீன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பாண்டுரங்கன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவை மனுதாரர்/பிரதிவாதி, உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 9ன் கீழ் மனு தாக்கல்

செய்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் : –**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரருக்கு எதிராக குறித்தவகை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர், எதிர்மனுதாரருடன் பண பரிவர்த்தனை மட்டும் வைத்திருந்ததாகவும், கிரைய ஒப்பந்தம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்று எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளார். 28.01.2019 ஆம் தேதி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தினை M.பாபு என்பவருக்கு ரூ.30,00,000/–க்கு விற்பனை செய்வதாக ஒப்புக்கொண்டு கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளார். கிரைய ஒப்பந்தத்தின் பேரில் மனுதாரர் ரூ.29,00,000/– பெற்றுக் கொண்டு M.பாபு என்பவர் மனுதாரருக்கு ரூ.1,00,000/– மட்டும் செலுத்தவேண்டி இருந்துள்ளது. மனுதாரருக்கு எதிராக M.பாபு குறித்த வகை பரிகாரம் கோரி O.S.No.19/2022 என்ற வழக்கு தாக்கல் செய்து, இரண்டு மாதகாலத்திற்குள் மீதி கிரைய தொகை ரூ.1,00,000/–ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவேண்டும் என்று 29.07.2022 ஆம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர், M.பாபு என்பவருக்கு மட்டும் கிரைய பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும். O.S.No.9/2022 வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக்கவேண்டும்.

மேற்படி வழக்கில் எதிர்மனுதாரருக்கு வெற்றி பெற வாய்ப்புள்ளது கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்றால் மனுதாரருக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும்.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு, சட்டப்படியும், பொருண்மையின் படியும் நிலைக்கத்தக்கது அல்ல. மனுதாரர் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டவைகள் தவிர மற்ற சங்கதிகள் முற்றிலும் தவறானது. எதிர்மனுதாரருக்கு O.S.No.19/2022 என்ற வழக்கு பாபு தாக்கல் செய்த விவரம் இம்மனு தாக்கல் செய்த பிறகு தான் தெரியவந்தது. அதன் பிறகு வழக்காவணங்களை சரிபார்த்து, சான்றிட்ட நகல்களை பெற்ற பின்னர் தான் எதிர்மனுதாரரின் கோரிக்கையை ஏமாற்றும் பொருட்டு மனுதாரர், பாபு என்பவருடன் கூட்டு சேர்ந்துக்கொண்டு அசல் வழக்கு எண்.19/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவந்துள்ளது. அசல் வழக்கு எண்.19/2022 வழக்கு விவரம் 29.04.2022 ஆம் தேதிக்கு முன்பே மனுதாரரான பிரதிவாதிக்கு தெரியவந்துள்ளது. அசல் வழக்கில் 06.06.2022 ஆம் தேதியே மனுதாரரான பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அதில் பாபு தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.19/2022 பற்றி எதுவும் தெரிவிக்காமல் இவ்வழக்கான அசல் வழக்கு எண்.9/2022ல் வா.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்டபோது வழக்கினை நீட்டிப்பு

செய்யவேண்டும் என்றே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப் படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மனுதாரர் மீது எதிர்மனுதாரரான வாதி 04.08.2021 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை அனுசரித்து ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி வழக்கினை தாக்கல் செய்து அசல் வழக்கு எண்.9/2022 ல் எதிர்மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரரான பிரதிவாதி தாவா சொத்து சம்மந்தமாக பாபு என்பவர் 28.01.2019 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை அனுசரித்து கிரைய பத்திரம் எழுதி தரக்கோரி ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி இந்த மனுதாரர் மீது நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.19/2022 வழக்கினை தாக்கல் செய்து இருந்ததாகவும், மனுதாரர், பாபுவிற்கு எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் மனுதாரர், பாபுவிடமிருந்து ரூ.29,00,000/— பெற்றுக் கொண்டதாகவும், மேற்படி வழக்கில் தாவாப்படி தீர்ப்பாக இந்த மனுதாரர் ஒப்புக்கொண்ட நிலையில் 29.07.2022 ல் பாபு தாக்கல் செய்த

அசல் வழக்கு எண்.19/2022 வழக்கு தீர்ப்பளிக்கப்பட்டு பாக்கி கிரைய தொகை ரூ.1,00,000/—ஐ செலுத்த பாபுவிற்கு 2 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் இவ்வழக்கின் மனுதாரர்/பிரதிவாதியுடன் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் பணம் கடனாக பெற்றதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும் எனவே இது சம்மந்தமாக மனுதாரர் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ளுமாறு கோருகின்றார்.

7. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கு எண்.19/2022 ல் மனுதாரரும், பாபுவும் கூட்டு சேர்ந்துக்கொண்டு மோசடியாக தீர்ப்பு பெற்றுள்ளதாகவும், அசல் வழக்கு எண்.19/2022 வழக்கு விவரம் 29.04.2022 க்கு முன்பே மனுதாரரான பிரதிவாதிக்கு தெரியவந்தும் இவ்வழக்கில் 06.06.2022 ல் தான் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்ததாகவும், ஆனால் எதிர்வழக்குரையில் பாபு தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.19/2022 பற்றி எதுவும் தெரிவிக்காமல் இவ்வழக்கான அசல் வழக்கு எண்.9/2022 ல் வா.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்ட பிறகு வழக்கினை நீட்டிப்பு செய்ய இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது.

8. தாவா சொத்து சம்மந்தமாக மனுதாரரான ஏழுமலைக்கும், பாபுவிற்கும் இடையே அசல் வழக்கு எண்.19/2022 தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை பொறுத்து இருதரப்பிலும் மாறுபட்ட கருத்து இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக அசல் வழக்கு எண்.19/2022 ல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அது சம்மந்தமாக மனுதாரரான பிரதிவாதி தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையையும் பரிசீலித்து தீர்ப்பு வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும், எனவே இம்மனு அனுமதிக்கப்படவேண்டும் என்று முடிவு காணப்படுகிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 6 ஆம் நாள் சனிக்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.

இருப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.